விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 12 ஷவ்வா 7 இதழ் 136
யாழ்ப்பாணம் புதன்கிழமை 26–6–1985

## இலங்கை அரசுடன் தனிப்பட்ட பேச்சை கூட்டணி நடத்தாது!

(சென்னை)

"தமிழர் விடுதலைக் கூட்டணி தனிப்பட்ட முறையில் இலங்கை அரசுடன் எதுவித பேச்சும் நடத்தமாட்டாது. எதிர்காலத்தில் ஏதாகிலும் பேச்சுக்கள் நடத்தப்படுவதாயின் தீவிரவாத இளைஞர்களுடன் சேர்ந்தே கலந்துகொள்வோம்' இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

## சென்னையில் 'அமிர்'

இலங்கை அரசுடனும், எதிர்க்கட்சிகளுடனும் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சு நடத்திவருகிறது என்பதில் எதுவித உண்மையுமில்லையென்றுதிரு. அமிர்தலிங்கம் மறுத்தார்

தற்பொழுது இலங்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி உயர் அரசியல் குழு உறுப்பினர்கள் [பொலிட்பீரோ] எவரும் இல்லை என்று கூறிய திரு அமிர்தலிங்கம், தற்பொழுது இலங்கையில் இருந்து வரும் எப துகட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இனப் பிரச்னையைத் தீர்ப்பதில் இலங்கை எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை அறிய முயன்று வருகிறார்கள் என்று விளக்கினார்.

### றீகன் பாராட்டு

இலங்கையில் இனப் பிரச்னையை தீர்ப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்டுள்ள போர்நிறுத்த ஏற்பாட்டை அமெரிக்க அதிபர் திரு றீகன் பாராட்டி இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவிப்பதாக இந்தியப் பத்திரிகை

[8-ம் பக்கம் பார்க்க]

# பூட்டான் தலைநகரில் அரசு - இளைஞர் சந்திப்பு!

## இந்தியா ஏற்பாடு செய்வதாக டில்லி பத்திரிகை செய்தி

(புதுடில்லி)

தமிழ்த் தீவிரவாத இளைஞர் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசுத் தலைவர்களுக்குமிடையில் பூட்டான் தலைநகரில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருப்பதாக இந்தியத் தலைநகரில் செய்தி வெளியாகியுள்ளது.

பூட்டான் தலைநகரான திம்புவில் ஆரம்பமாகவிருக்கும் இந்த சந்திப்புக்கு இந்திய அரசு ஏற்பாடு செய்துவருவதாக புதுடில்லியில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அல்லது தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி அல்லது இருவருமே கலந்துகொள்ளக் கூடும் என்று அப்பத்திரிகை கூறியுள்ளது.

### பிரபாகரன் அறிக்கை

இதேவேளை சென்னையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரன் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் யுத்த நிறுத்தம் அறிவித்துவிட்டு அது தொடர்பாக இலங்கை அரசு எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்காதிருப்பதால் தமது இயக்கம் இன்னும் 12 வாரங்களில் தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என்று அறிவித்துள்ளார்.

இதே வேளை இனப்பிரச்னையைத் தீர்க்க உதவும் வகையில் சிறிமாவோவின் சிவில் உரிமைகளை வழங்குமாறு இந்தியா இலங்கையை கேட்பதாகத் தெரியவருகின்றது.

## உலகின் மூன்றாவது மோசமான விமான விபத்து

(புதுடில்லி)

அத்லாண்டிக் மா கடலுக்கு மேலே வெடித்துச்சிதறி விழுந்த இந்திய விமான விபத்து உலகில் நடந்துள்ள மூன்றாவது மிக மோசமான விபத்து என அறிவிக்கப்பட்டுள்ளது இதுஇந்தியாவில் நடந்துள்ள நான்காவது விமான விபத்து.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவை ஆண்ட ஒரு மன்னரான 'கனிஷ்கா' என்பவரின் பெயர் இவ்விமானத்துக்கு இடப்பட்டிருந்தது.

1978ம் ஆண்டு நாலரைக் கோடி டாலருக்கு அமெரிக்க

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தளபதி இந்தியாவுக்கு தப்பிவிட்டார்

(கொழும்பு)

பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதம தளபதியான விக்டர் அல்லது ஒஸ்கார் என்பவர் இந்தியாவுக்குத் தப்பியோடி விட்டதாக பந்தோபஸ்து வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ராணுவ கொமோண்டோக்கள் மன்னாரிலுள்ள புலிகள் முகாம் ஒன்றினைத் தாக்கியதை அடுத்து பாதுகாப்பு படை வட்டாரத்தினால் இவர் தேடப்பட்டுவந்தவர் என்று கூறப்படுகின்றது. [அ]

## அந்தக்கோரவிபத்தில் பலியான இருவர் இலங்கைப் பெண்கள்

[மொன்ட்றியோல்]

எயர் இந்திய விமான விபத்தில் பலியான 329 பேரில் இலங்கையைச் சேர்ந்த இரு இளம் பெண்களும் அடங்குவர்.

சர்மிளா லோரன்ஸ் [18 வயது], ச்ரீத்திக்கா லோரன்ஸ் [16 வயது] ஆகிய இலங்கையைச் சேர்ந்த இரு சகோதரிகளுமே இந்த விமானத்

(8ம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை சிறையில் என் கண்முன்னாலேயே டாக்டர் ராஜசுந்தரம் கொலையுண்டார்

### வண. பிதா சிங்கராயர் தொடர்ந்து சாட்சியம்

[கொழும்பு]

"1983ம் ஆண்டு ஜூலைமாதம் டாக்டர் ராஜசுந்தரம் (காந்தியத் தலைவர் எனது கண்முன்னாலேயே கொலை செய்யப்பட்டார். சிறைச்சாலையில் இரண்டாது கட்டமாக நடந்த கொலைச் சம்பவமிது எங்களை கொலைசெய்யாதீர்கள் என்று டாக்டர் ராஜசுந்தரம் பல தடவைகள் சிங்கள மொழியில் கெஞ்சிய போதிலும் அவர் கொலைசெய்யப்பட்டார்".

வண. பிதா. ஆபரணம் சிங்கராயர் தமக்கெதிராக அவ

(8ம்பக்கம் பார்க்க)

## கொள்ளை, கடத்தலை எதிர்த்து யாழ். நகரில் 200 ஊழியர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்]

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 200 ஊழியர்கள், கொள்ளை, கடத்தலை எதிர்த்து யாழ்.நகரில் நேற்றுக்காலை, சுலோக அட்டைகளுடன் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள் யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத் தலைமைக் காரியாலயத்

(8-ம் பக்கம் பார்க்க)



யாழ். ஐக்கியவியாபாரச் சங்க ஊழியர், சங்கத்தில் நடந்த கொள்ளைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். நகரில் நடத்திய உண்ணாவிரதத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## அடுத்த வாரம் முதல் மூடப்பட்ட பெற்றோல் நிலையங்கள் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் மூடப்பட்டிருந்த சகல எரிபொருள் விற்பனவு நிலையங்கள் அடுத்தவாரம் முதல் செயல்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல எரிபொருள் விற்பனவு நிலையங்களும் இயங்கத் தொடங்கும் பட்சத்தில் யாழ். மாவட்டத்தில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணை ஆகியவற்றுக்கு நிலவிவந்த தட்டுப்பாடு அறவே நீங்கிவிடும் என்று பாவனையாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இப்பொழுது கொழும்பு காங்கேசன்துறை ரயில்சேவை தினசரி நடைபெற்று வருவதால் எரிபொருள்கள் தாராளமாக யாழ் மாவட்டத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்

[8ம் பக்கம் பார்க்க]

# விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை றெயில் பாதைக்கருகில் நாவலடி ஒழுங்கையில் 5 பரப்புத் தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: க. வில்வளி, அண்ணா வீதி, பலாலி. 3996

BROILERS இறைச்சிக் கோழிகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைசந்தையடி, நல்லூர். 3953

திருநெல்வேலி விவசாயப் பாடசாலை முன் ஒழுங்கையில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: நா. இராசையா. விவசாயப் பாடசாலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 4011

பலாலி றோட் கந்தர்மடம் ஆலடிச் சந்தியிலுள்ள 308, 310 இலக்கம்கொண்ட இரு கடைகள் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: 5A, மணல்தறை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 4017

நல்ல நிலையிலுள்ள 143 K நஷனல் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. செல்வத்துரை, கூளாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை. 4020

## வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் சகல வசதிகளுடன் விசாலமான கடையொன்று (60'X15') வாடகைக்கு உண்டு. விண்ணப்பிக்க விளம்பர இல: மே/பா., ஈழநாடு. 4027

4 அறைகள் குசினி உட்பட சகல வசதிகளும்கொண்ட வீடு வாடகைக்குண்டு: தொடர்பு: 158, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 4012

## தேவை

யாழ். நகரில் உள்ள ஒரு பிடவைக் கடைக்கு விற்பனையாளர் தேவை ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராக இருந்தால் முன்னுரிமை கொடுக்கப்படும். தொடர்பு: விளம்பர இல: 4015, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4015

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஸ்தாபனத்திற்கு நல்ல அனுபவமும், நேர்மை, நம்பிக்கையுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் [Security Officer] தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4018 C/O ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 4018

## வகுப்புக்கள்

விஞ்ஞான முறைப்படி வெட்டவும் தைக்கவும், ஐசிங் கேக் கொண்டை போடுதலும், பூக்கள் தயாரிப்பதும் நவீன முறைப்படி போதனை செய்யப்படுகின்றன. இல-50 அரசடி வீதி, வண்ணார்பண்ணையில், இயங்கி வந்த நிறுவனமே, புதிய இடத்தில் வகுப்புக்களை நடாத்துகிறது. மாணவர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். Anita of Dress Making திருமதி பி. சிவசுப்பிரமணியம், கே. கே எஸ் வீதி, பூநாறிமரத்தடி, கொக்குவில். 3994

## தெரிவு

(யாழ்ப்பாணம்)

பொம்மைவெளி மஸ்ஜிதுல் அபூபக்கர் மார்க்க கல்வி கற்றபோதனை நிலையத்தில் கல்வி ஆறுமாணவர்கள் உயர்கல்வி மார்க்கப் போதனையைப் பெறுவதற்காக குருநாகல் உஸ்வதுன் ஹஸனா கலாசாலைக்கு தெரிவாகியுள்ளார்கள். இவர்களைவழிபனுப்பிவைக்கும் வைபவத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை வறுத்தலை விளானைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சுந்தரலிங்கம் என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

கந்தையா சுந்தரலிங்கம்
கைம்பெண் கமலாவதி
''தவ வாசா'' வறுத்தலை விளான், தெல்லிப்பழை
மனுதார்

மரணசாதன நியாதிக்கம் } இல. ரி/223

எதிராக

1. சுந்தரலிங்கம் ரவிச்சந்திரா, இல 40 கென்றிக் அவன்யூ, லண்டன் தனது தத்துவகாரன் மனுதார் மூலம்
2. சுந்தரலிங்கம் மகள் சந்திரிகா
3. சுந்தரலிங்கம் மகள் சித்திரகலா இருவரும் வறுத்தலைவிளான், தெல்லிப்பழை

எதிர்மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985ம் ஆண்டு ஆனி மாதம் 17ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்
பதிவாளர்

மு. யோககுமார்
மனுதாரின்
சட்டத்தரணி 4021

## ஐந்தாண்டு நினைவு தினம்



கந்தையா
கனகரத்தினம்

தோற்றம்:
19-10-1939
மறைவு:
21-06-1980

பண்ணோடு கூடிப் பாட்டாக வந்தாலும்
விண்ணோடு சேர்ந்து வெண்ணிலவாய் நின்றாலும்
கண்ணோடு சேர்ந்து காட்சிகளைக் கண்டாலும்
என்னோடு சேர்ந்து வாழும் நாள் எந்நாளோ!
காலங்கள் கடந்தாலும் கவலைகளோ தீராது.
உங்கள் ஆத்ம சாந்திக்காக தெய்வத்திடம்
மண்டியிடும்

அன்பு மனைவி, சகோதர, சகோதரிகள்.
வட்டாரம் 8, மண்டைதீவு. 3992

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திரு. செ. ஸ்ரீநிவாசன்
(பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர்)



தோற்றம்:
1910
தை

மறைவு:
1985
வைகாசி

உங்கள் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும்
மகன், மகள், மருமகன்,
உற்றூர், உறவினர்.

பண்ணாகம்,
26-6-85. [4000]

## 41-ம் நாள் நினைவஞ்சலி





அமரர்கள்:

மயில்வாகனம் கணேசமூர்த்தி,
[J.P U.M. - சட்டத்தரணி, அனுராதபுரம்]
ஆண்டவன் படைப்பு: 13-07-1939

கேதீசன்
(மகன்)
13-11-1974

சிவகௌரி
(மகள்)
14-12-1975

ஆள்பவன் அழிப்பு: 17-05-1985

அன்பார்ந்த பண்பார்ந்த அறங்கள் பல புரிந்து
இன்பார்ந்த ஆத்மசுகம் அடைந்துவிட்ட புண்ணியனே
மங்காது நம்நினைவில் என்றுமே நிலைத்திடுவாய்
தங்காது எப்பணியும் தரம்பாராது முடிப்பவனே
ஓராறு வாரங்கள் ஓடியே மறைந்தும்
நீராறு நம்விழியில் வற்றக் காணவில்லை
பொருள் பொன்னென்று யாருமே விண்ணுக்குத் கொண்டு செல்லவில்லை
ஆனால் நீயோ அருள்மிகு உன் மதலையருடன் இறைவனடி கலந்துவிட்டாய்.

(இன்று (26-6-85) நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகளில் உற்றூர், உறவினர் அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

''இந்திர வாசா'',
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

அன்பு மனைவி, அருமை மக்கள்,
உற்றூர், உறவினர்.

(4022)

## ஓராண்டு நினைவஞ்சலி

உயர்திரு. வீ. யோகராஜா அவர்கள்
(பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை நேரப் பதிவாளர்)

மலர்வு:
7-11-1938

உதிர்வு:
6-7-1984

திதி: 26-6-1985



அன்புத் தெய்வமே!
ஒளி மறையும் வேளையிலே
உயிர் பிரிந்து போனதிலே
ஒளி இழந்தோம் வாழ்வினிலே உங்கள்
நினைவுகள் தான் எங்கள் துணையோ
எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்
கொண்டனையே!

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்
அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்.

இரசாயனத் தொழிற்சாலை,
பரந்தன். (3999)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## ● இந்திய போயிங் தகர்ப்பு——————

# நியுயோர்க்கில் உரிமைகோரியவர்கள் சீக்கிய மாணவர் பேரவையினராம்!

## குண்டு வைப்புடன் வன்கூவர் நகர் பெருமளவில் சம்பந்தம்!!

லண்டன், ஜூன்–25

அந்திலாந்திக் கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்திய 'போயிங்' விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு நியூயோர்க்கில் உரிமை கோரியிருந்த இரு தீவிரவாதப் பிரிவினரில் ஒரு சாரார் சீக்கிய மாணவர் பேரவையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர் அமைப்பு '10-வது அணி' என்றும் அழைக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது இந்த அமைப்புடன் வேறு சில சீக்கிய தீவிரவாதப் பிரிவுகளும், காஷ்மீர் பிரிவினைவாதிகளும் தாமே அந்த விமான நாசவேலைக்குப் பொறுப்பென்று உரிமை கோரியுள்ளன.

இதேவேளை இந்திய போயிங் வெடிவைப்புச் சம்பவத்திற்கு நியுயோர்க்கில் உரிமைகோரியவர்கள் தொடர்பாக றோயல் கனேடியப் பொலிசார் அமெரிக்க எவ். பி ஐ புலனுய்வுத் துறையினருடன் சேர்ந்து தீவிர புலன்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்திய விமான வெடிப்புச் சம்பவம், டோக்கியோவில் நிகழ்ந்த விமானப் பொதி குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தித் தற்போது ஆராயப்பட்டுவருகின்றது

டோக்கியோவின் 'கனேடிய பசுபிக்' விமானமொன்றிலேயே அதிலிருந்து இறக்கப்பட்ட இரு சூட்கேஸ்களிலிருந்து குண்டுகள் வெடித்தன. இந்தக் கனேடிய விமானம் வன்கூவரிலிருந்தே டோக்கியோ வந்திருந்தது.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை விபத்துக்குள்ளான இந்திய 'போயிங்' விமானமும் வன்கூவர் நகருடன் தற்போது பெரிதும் சம்பந்தப்பட்டுள்ளது.

இந்த நகரிலிருந்தே உள்ளூர் விமானச் சேவையொன்றின் மூலம் பெருமளவு இந்தியப் பயணிகள் அந்த இந்திய போயிங் விமானத்தில் பயணம் செய்வதற்காக டொரன்டோ நகர் வந்திருந்தனர்.

எனவே டோக்கியோ சென்ற கனேடிய விமானத்திற்கும் டொரன்டோவில்இருந்து புறப்பட்ட இந்திய விமானத்திற்கும் வன்கூவர் நகரில்வைத்தே வெடிகுண்டுகள் ஏற்றி அனுப்பப்பட்டிருக்கலாமென்று அறியப்படுகின்றது. இந்த நகரிலேயே பெருமளவு சீக்கியர்கள் கனடாவில் வாழ்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க டொரன்டோ நகர விமான நிலையத்தில் பயணப் பொதிகளின் உட்புறத்தைப் படம்பிடித்துக் காட்டும் 'எக்ஸ்ரே' கருவிகள் பழுதடைந்திருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## இந்திய, இத்தாலிய——————

## விமானங்களில் வெடிகுண்டுப்புரளி!

ரோம், ஜூன்-25

நேற்று முன்தினம் லண்டனில் இந்திய விமானமொன்றுக்கும், ரோமில் இத்தாலிய விமானமொன்றுக்கும் வெடிகுண்டு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் நியூயோர்க்செல்வதற்காக இததிய விமானமொன்று புறப்படத்தயாரான போது அவ்விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக அநாமதேய தொலைபேசி அழைப்பொன்று தெரிவித்தது.

இதனையடுத்து அவ்விமானம் சுமார் 7 மணி நேரம்வரை சோதனையிடப்பட்ட பின்னர் அத்தொலைபேசித் தகவல் ஒரு வெறும் புரளி என்று அறியப்பட்டது. தொடர்ந்து அவ் விமானம் தனது பயணத்தை மேற்கொண்டது.

இத்தாலியில் ரோம் நகரிலும் விமான வெடிகுண்டுப் புரளியொன்று கட்டவிழ்த்துவிடப்பட்டது.

அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் நேற்று முன்தினம் ரோம் நகரிலிருந்து புறப்பட்ட சில மணி நேரத்தில் இத்தாலிய விமானமொன்று வியன்னா நோக்கிப் புறப்பட்டது.

தொலைபேசியில் அந்த விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து அவ்விமானம் மீண்டும் ரோமுக்கு அழைக்கப்பட்டு தீவிரமாகச் சோதனையிடப்பட்டது. இறுதியில் அத்தகவலும் ஒரு புரளி என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## 99–வது விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் ஆரம்பம்

லண்டன், ஜூன்-25

விம்பிள்டனில் 99-வது டென்னிஸ் சாம்பியன் சுற்றுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாயின.

இப்போட்டிகளின் ஆரம்பத்தில் செக்கோஸ்லாவாக்கிய வீரர் இவான் லென்டல் சுற்றுப் போட்டியொன்றில் வெற்றிபெற்றார்.

இத்தடவை விம்பிள்டன் உலகச் சாம்பியனை அமெரிக்க வீரர் ஜோன் மக்கன்ரோ, ஜிம்மி கொனர்ஸ், செக்கோ. வீரர் இவான் லென்டல், மற்றும் சுவீடன் வீரர் மாஸ் விலான்டர் ஆகியோருக்கிடையே கடும் போட்டி நிகழலாமென எதிர்பார்க்கப்படுகிறது

அமெரிக்க வீரர் மக்கன்ரோ கடந்த 4 வருட காலமாக விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தைத் தமதாக்கிவைத்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் பிரிவில் அமெரிக்க வீராங்கனை மாரிட்டினா நவரத்திலோவா விம்பிள்டன் சாம்பியனாகவுள்ளார். (கி)

## விமான நிலயத்தில் பலத்தசோதனை

(கொழும்பு)

ஏயர் இந்திய விமான விபத்தையடுத்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலயத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

விமானங்களில் ஏற்றப்படும் சகல பெதிகளும் இலத்திரவியல் எக்ஸ்றே கருவிகளைப் பயன்படுத்தி பரிசோதிக்கப்படுகின்றன. சகல பிரயாணிகளும் தீவிர பரிசோதனை செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (சி. பெ)

## லெபனுன் கடலிலிருந்து——————

# அமெரிக்கக் கப்பல்கள் வாபஸாக வேண்டும்!

## ரி. டபிள்யு. எ. கடத்தல்காரர்களின் புதிய நிபந்தனை!

பெய்ரூட், ஜூன் 25

கடந்த இருவார காலமாக இடம்பெற்று வரும் அமெரிக்க ரி. டபிள்யு. ஏ. விமானக் கடத்தல் நாடகத்தில் பயணக் கைதிகளின் விடுதலைக்குப் புதிய நிபந்தனையொன்றும் விதிக்கப்பட்டுள்ளது.

''லெபனுன் கடல் பகுதியிலிருந்து சகல அமெரிக்கப் போர்க் கப்பல்களும் வாபஸ் பெறப்படவேண்டும்'' என்பதே இந்த நிபந்தனையாகும். லெபனுன் நீதி அமைச்சரும், ஷியாட் அமல் முஸ்லிம் இயக்கத் தலைவருமான நபிபெரி இந்த நிபந்தனையை விடுத்துள்ளார்.

இப்புதிய நிபந்தனையை அமெரிக்கா ஏற்க மறுத்துள்ளது. 'அமெரிக்க போர்க் கப்பல்கள் லெபனுன் கடலில்லாது சர்வதேச கடல்பிராந்தியத்திலேயே நிறுத்தப்பட்டுள்ளன. அவை எக்காரணம் கொண்டும் வாபஸ் பெறப்படமாட்டா'' என அமெரிக்க பாதுகாப்பமைச்சர் வெயின் பேக்கர் தெரிவித்துள்ளார்.

லெபனுனின் இப்புதிய நிபந்தனை கடத்தல் நாடகத்தை மெலும் சிக்கலாக்கி விட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா 14 போர் விமானங்களுடன் ஒரு விமானந் தாங்கிக் கப்பலையும், 1300 துருப்பினரையும், சில சிறிய போர்க் கப்பல்களையும் லெபனுன் நோக்கி நகர்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிலுள்ள சகல ஷியாட் முஸ்லிம் கைதிகளும் விடுவிக்கப்படவேண்டும் லெபனுனிலிருந்து சகல இஸ்ரேலியப் படைகளும் வாபஸாக வேண்டுமென்பது கடத்தல்காரர்கள் ஏற்கனவே விடுத்திருந்த நிபந்தனைகளாகும்.

சுமார் 40 அமெரிக்க விமானப் பயணிகள் தொடர்ந்து பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர் இவர்களைமீட்க இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படமாட்டாது என அமெரிக்க அதிபர் உறுதியளித்துள்ளார்.

இதே வேளை அதிபர் றீகன் இக்கடத்தல் நாடகம் காரணமாக கலிபோனியாவில் தாம் எடுக்கவிருந்த ஓய்வை ரத்து செய்தபின்னர் வெள்ளை மாளிகையிலேயே தொடர்ந்து இருந்து அக்கடத்தல் நாடகம் குறித்த தகவல்களை அறிந்து வருகின்றார். (கி

## விமானப் பயண அச்சுறுத்தல்

## ஐரோப்பிய போக்குவரத்து அமைச்சர்கள் மகாநாடு

பொன், ஜூன் 25

சர்வதேச ரீதியில் விமானப் போக்குவரத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையையடுத்து எட்டு ஐரோப்பிய போக்குவரத்து அமைச்சர்கள் லக்ஸம்பேர்க் நகரில் உச்சிமகாநாடொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இம்மகாநாட்டில் சர்வதேச ரீதியில் விமானப் போக்குவரத்துக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்குவது மற்றும், பிரயாணிகளின் உயிராபத்துக்களைத் தவிர்ப்பது தொடர்பாக ஆராயப்படும்.

இதேவேளை ஓந்திய போயிங் விமான குண்டுவெடிப்புச்சம்பவம், டோக்கியோ விமான நிலைய குண்டுவெடிப்புச் சம்பவம் ஆகியவற்றையடுத்து சகல சர்வதேச விமான நிலையங்களும் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளன

இந்தியாவின் சகல வெளிநாட்டு, உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்களும் தற்போது கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குள்ளாயின. விமான நிலையங்களில் கூடுதல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டும்வருகின்றன. (கி)

## வணிகமுதல் தேர்வு பரீட்சை

## பதிவுசெய்யத் தவறிவர்கள் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ஜெயவர்த்தபுர பல்கலைக்கழகத்தில் 1985/86ம் ஆண்டு வணிகமுதற் தேர்வுப் பரீட்சைக்குப் பதிவு செய்யத்தவறியவர்கள் உடனடியாக யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவ மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மன்றச் செயவாளர் கேட்டுக் கொண்டிருக்கிறார்

மேற்படி தேர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் முன்னர் கோரப்பட்டபோது யாழ்ப்பாண நிலைமை காரணமாகப் பல மாணவர்கள் பதிவு செய்யத் தவறிவிட்டனர்

இதுசம்பந்தமாக யாழ். பட்டப்படிப்புகள் மாணவர் மன்றம் இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் ஊடாக கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ் தொண்டமானுடன் தொடர்பு கொண்டதன் பேரில் அமைச்சர், உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே மூலம் மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காகத் தமிழ் மாணவர் மன்றச் செயலாளர் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளார். (மா)

## எழுதுமட்டுவாள் இணக்க சபை

[யாழ்ப்பாணம்]

எழுதுமட்டுவாள் கிராம சேவகர் பிரிவிற்கான சமாதான சபை அங்குரார்ப்பணக் கூட்டம் விசேட சேவை அலுவலர் திரு. பொ. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது பின்வருவோர் சமாதான சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்;- சட்டத்தரணி த. வேலாயுதம், செயலாளர்:- அதிபர் ஐ. வரதராசா, உப

[7ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

காய்ச்சிய பாலில் ஆடைதானே மேலெழுகிறது.
நல்லவன் ஆகின்றவனுக்கு உயர்வு தானே வருகிறது.

— அருள்விருந்து

## நமது நோக்கு

# விஞ்ஞான பீடங்களில் வீண்போகும் வெற்றிடங்கள்

பல்கலைக்கழக அனுமதிக்கு விஞ்ஞான பீடங்களில் பொதுவாகப் போட்டி மிகப் பெரிது.

பாடசாலைகளில் இப்போட்டி ஆரம்பிக்கிறது. ஏன் இன்று பாலர் வகுப்புகளிலேயே பிள்ளை விஞ்ஞானம் படிக்கவேண்டுமென்ற பேராசை பெற்றோரை வாட்டுகிறது.

தலையா வாலாவென்று தரம் பிரிப்பது சிரேட்ட பாடசாலைகளின் எட்டாம் வகுப்பில் பெரும் சவாலாக இருக்கிறது. கலைப் பிரிவில் இன்று பலவித பாடத் திட்டங்கள் இருக்கும்போதும் ஆற்றல் பெற்ற மாணவர்கள் விஞ்ஞானத்தையே விரும்புகின்றனர்.

ஆற்றல் குறைந்த மாணவர்களானாலும் பெற்றோர் விஞ்ஞான வகுப்புகளில் புகுத்திவிடப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர்.

திறமைக்கும் தேவைக்கும் ஏற்ற இடங்கள் பல்கலைக்கழகங்களில் இன்னும் பற்றாது இருக்கின்றன. இதனை நிவர்த்திசெய்வது வெகுவிரைவில் முடியுமென்று நம்ப இடமில்லை.

இந்தநிலைமையிலும் கடந்த வருடம் நடந்தஏ எல் பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பட்டப் படிப்புக்குத் தகைமை பெற்றோர் தொகை 713 ஆனால் அதனை விரும்பி விண்ணப்பித்தவர்கள் 512 பேர்.

விஞ்ஞானபீடத்தில் அமைந்த பௌதிகப் பிரிவில் மொத்தம் 780 இடங்கள் உண்டு. ஆனால் அனுமதிக்குத் தகைமைபெற்றோர் 713 அதனை விரும்பி விண்ணப்பித்தோர் தொகை 512 ஏனைய 201 இடங்கள் வீண்போகின்றன.

விஞ்ஞானப் படிப்புக்கு இருக்கும் போட்டியில் மொத்த இடங்களுக்கு மாணவர் சித்தி போதாமை ஒருபுறம் சித்தி பெற்ற மாணவர் இதனை நிராகரிப்பது மறுபுறம்.

பல்கலைக்கழகங்களின் அண்மைக்கால வரலாற்றில் விஞ்ஞான பீடத்தில் வெற்றிடங்கள் வீண்போவது இதுவே முதல் தடவையாகுமென பல்கலைக்கழக மானிய சபைத் தலைவர் பேராசிரியர் கல்பகே கருத்துத் தெரிவித்திருக்கிறார். அவர் குறிப்பிடும் காரணங்கள் இரண்டு. படித்தால் மருத்துவம் அல்லது பொறியியல்: இல்லாவிட்டால் மூன்று வருடம் அங்கு மட்டையடிப்பதிலும் பார்க்க ஒரு தொழில் தேடுவது நல்லதென்று மாணவர்கள் நினைக்கின்றனர்.

மற்றது, ஒருமுறை தவறினால் அடுத்தமுறை பொறியியல் பகுதியில் அனுமதி கிட்டுமென்று பௌதிக விஞ்ஞானத்தை நிராகரிக்கின்றனர்.

சில வருடங்களுக்கு முன் மருத்துவம் படிப்பவர்களுக்கு, பட்டம் கிடைத்தும் வேலை நிச்சயமில்லை என்பதை பாடசாலை அதிபர்கள் வற்புறுத்தவேண்டும் என்று கேட்கப்பட்டனர்.

மாணவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கிலிகொண்டு பொறியியல் வகுப்புக்குப் படையெடுத்தனர்.

மீண்டும் காற்று மாறியது. பொறியியலாளர்களுக்கு வேலை இல்லை என்றதும், உயிரியல் என்ன என்று தெரியாத கூட்டம் மருத்துவப் படிப்புக்குப் போட்டி போட்டது.

டாக்டர்களுக்கு வேலை இல்லையென்றாலும், வீட்டில் ஒரு மருத்துவசாலை நடத்தவோ, வேறு வழியில் தொழில்புரியவோ போதிய சீதனம் உதவும்; அதுமட்டுமல்ல டாக்டர் என்றால், அதுவும் யாழ்ப்பாணத்தில் பேசவும் வேண்டுமா என்ற மனப்போக்கு நீண்டகாலம் நிலைக்கும்.

எனவே காலத்துக்குக் காலம் கல்வி, தொழில், அரசியல், சமுதாய தேவைகள் மாற்றமடைவது இயல்பு.

அது அவ்வாறிருந்தபோதும் பல்கலைக்கழகங்கள் தேவைக்கேற்ற அளவுஇடங்களைப் பூர்த்திசெய்யாதநிலையில் வெற்றிடங்கள் வீண்போவது பாடத் திட்டங்களினதும் பட்டப்படிப்பின் அமைப்பினதும் குறைபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது.

பௌதிக பட்டதாரிக்கு உரிய தொழில் துறைகள் இல்லாதமையே இந்த விபரீதத்துக்கு இடமளித்திருக்கிறது.

மொத்தம் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும், அனுமதிபெறும் தகுதியுடையவர் தொகை 11,698: ஆனால் 5426 பேருக்கே இடமுண்டு.

இந்த நிலையிலும் ஒரு வெற்றிடமாவது வீண்போவது பல்கலைக் கழக அமைப்பின் சீர்கேட்டைக் குறிக்கின்றது.

இவ்வருட அனுமதியில் காணப்படும் இன்னொரு குறைபாடு வியப்புக்கு இடமளிக்காது. எல்லாத்துறைகளிலும் மாணவர் சித்தி கடந்த வருடங்கள் போல உயர்வாகவில்லை. உதாரணமாக கடந்த வருடம் மருத்துவத்துறை அனுமதிக்கு ஆகக் குறைந்த மொத்தம் 261 புள்ளிகள். இன்று 253 ஆகக் குறைந்திருக்கிறது. மருத்துவத்தில் மாத்திரம் இக்குறைவு அதிகம் இல்லை. வேறுபல துறைகளில் 30 புள்ளிவரை குறைந்திருப்பது நாடளாவிய நிலையில் படிப்பு மோசமடைந்ததை நிரூபிக்கிறது.

ஆழ்ந்த ஆராய்ச்சியில் வேறுபல கருத்துக்கள் கிளம்பலாம், நாம்சொல்வது கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா என்பது

நாடு சீர்குலைந்திருக்கும் வேளையில் இந்த நிலையே பாராட்டுக்குரியதாகும்.

பல்கலைக் கழக அனுமதியிலிருந்து மூளைத்த குழப்பம் முற்றாக நீங்குவதானால் நாட்டின் உண்மைத் தேவைக்கேற்ப பாடவிதானங்கள் மாற்றி அமைப்பது அவசியம்.

---

# “அனுராதபுரத் தாக்குதலின் பின்னரே தமிழ்ப் பகுதிகளில் நடந்ததை சிங்கள மக்கள் அறிந்தனர்”

## ‘பார்ஈஸ்டேன் றிவியூக்கு’ ஜனாதிபதி பேட்டி

(கொழும்பு)

“அநுராதபுரத்தில் சிங்களவர்களும், யாத்திரீகர்களும் தமிழ் தீவிரவாதிகளினால் தாக்கப்பட்ட பின்னரே இலங்கையின் தமிழ்ப்குதிகளில் இதுவரை காலமும் என்ன நடைபெற்றதுஎன்பதனை சிங்கள மக்கள் அறிந்துள்ளார்கள் என்பதனை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்” என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வெளிநாட்டுப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

‘பார் ஈஸ்டேர்ன்றிவியு என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் இம்மாதம் 2-ம், 3-ம் திகதிகளில் இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தியுடன் புதுடில்லியில்நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் அவர் இந்தப் பேட்டியை அளித்துள்ளார்.

### எதிர்த்தால் பதவி நீக்கம்

அவர் அந்தப் பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையின் இனப்பிரச்னையை இவ்வருட இறுதிக்குள் தீர்த்துவைக்க முடியும் என்று நம்புகின்றேன் பிரச்னைக்கான தீர்வுகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் இத்தீர்மானத்தை அமைச்சர்கள் யாராவது எதிர்த்தால் அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள். எவ்வித எதிர்ப்பு வந்தாலும் எனக்கு சரியென்று படுவதனை நான் செய்தே தீருவேன்.

### ராஜினாமா செய்யவும் தயார்

இந்த நாட்டு மக்கள் எனது இனப்பிரச்னை தொடர்பான திட்டத்தை ஏற்க மறுத்தால் நான் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யவும் தயாராகவுள்ளேன். ஆனால் அத்தகைய சம்பவம் ஒன்று ஏற்படுவதற்குச் சாத்தியம் இல்லை.

### எதிர்ப்புக்கு அஞ்சமாட்டேன்

எனது வீட்டில் நானே எஜமான், பிரிவினைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நான் எடுக்கும் திட்டத்தை எந்தப்பக்கத்திலிருந்து எதிர்ப்பு வந்தாலும் நான் அஞ்சமாட்டேன். இப்பிரச்னையைத் தீர்க்க தமிழர்கள், எதிர்க்கட்சிகள், அறிஞர்கள், இந்தியர்கள், அரசாங்க அமைச்சர்கள், கட்சி உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்பேன், ஆனால் எது சரியென்பதை நானே தீர்மானிப்பேன்.

### சிறில் மத்தியு நீக்கப்பட்டார்

சர்வகட்சி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட ஆலோசனைகளில் எமக்குள் கருத்து வேறுபாடு இருந்தது. இதனால்தான் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் சிறில் மத்தியு பதவி விலக்கப்பட்டார். அப்போது அதனைச் செய்ய முடியுமாயின் இனிமேலும் அதனைச் செய்ய என்னால் முடியும். இதனைச் சகலரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

### பாராளுமன்றத்தை கலைக்க அதிகாரம்

எனது திட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்த பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான அங்கத்தவர்கள் ஆதரிக்கவேண்டும் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் எனக்கு உண்டு. என்னாலேயே அதனை முடிவு எடுத்து செயல்ப்படுத்த முடியும்.

### பதவியிலிருந்து இறங்கி

மக்கள் எனக்கு எதிராக கிளம்பினால் நான் ஒன்றும் செய்யமுடியாது. அத்தகைய சம்பவம்ஒன்று ஏற்படுமாயின் நான் பதவியிலிருந்து இறங்கி இப் பிரச்னையை சமாளிக்கக் கூடியவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்கத் தயாராகவுள்ளேன். ஆனால் அத்தகைய நிலை ஒன்று தோன்றாது. இதனால் இவ்வருட இறுதிக்குள் இனப்பிரச்னைக்கு முடிவு காணப்படும்.

சிங்கள மக்கள், தமிழ்மக்கள் ஆகியோருக்கு எதிராக செயல்படுபவர்என்று யாரும் என்னைக் கருதக்கூடாது. பண்டைய இந்தியா அயல்நாடுகளுக்கு உதவவேண்டும்.

### நல்ல திருப்பம்

இந்தியா இலங்கையை ஆக்கிரமிக்கும் என்று நான் அஞ்சவில்லை. இப்போது இப்பிரச்னைக்கு ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தமிழ் கெரிலாக்களின் முகாம்கள் பற்றியும் ரஜீவ் காந்தியுடன் பேசினேன்.

### இராணுவம் கட்டுப்பாடாக இருக்கும்

பயங்கரவாதம் நிறுத்தப்படுவது மாத்திரமன்றி அது முற்றாகவே ஒழிக்கப்படவேண்டும். அதேபோன்று எமது இராணுவமும் கட்டுப்பாடாக இருக்கும் என்று வாக்குறுதி அளித்துள்ளேன்.

தமிழ்மக்கள் பாரம்பரியமாக வசித்துவரும் வடக்கு-கிழக்குப் பகுதிகள் இணைக்கப்படுவதினை நான் எதிர்த்துள்ளேன். அதனை இப்போதும் ஏற்கமாட்டேன். ஆனால் மாகாண கூட்டுச்சபைகள். நிதி விடயங்கள் நிர்வாக சேவைகளை தம் வசம் வைத்திருத்தல் என்பன பற்றி பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

### மக்கள் மனநிலை மாறியுள்ளது

அநுராதபுரம் சம்பவத்தின் பின் இங்குள்ள மக்களின் மனநிலை மாறியுள்ளது. அரசியல் தீர்வு ஏற்படவேண்டும் என்று அவர்களே ஏற்றுக்கொள்கிறார்கள்.

பிக்குகள் அரசியல் விவகாரத்தில் தலையிடுவதில் குற்றமில்லை. நாட்டுபிரஜைகள் என்றமுறையில் அவர்களுக்கு உரிமையுண்டு ஆனால் முக்கிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் புத்த பிக்குகள், எம்மை வழி நடத்தலாம் என்ற யோசனைக்கு ஒத்துப்போக முடியாது என்றும் அவர் அந்தப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

---

# பண்டிதமணியின் இரு நூல்கள்

## விரைவில் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் படைப்புகளான இருநூல்கள் விரைவில் வெளியிடப்படவிருக்கின்றன.

இதுபற்றி அண்மையில் நாவலர்மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

பண்டிதமணியின் அன்பினைந்திணை, அத்வைத சிந்தனை ஆகிய இரு நூல்களையும் பேராசிரியர் சு வித்தியானந்தன் தலைமையில் எதிர் வரும் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிடுவது பற்றியும் கருத்துப் பரிமாறப்பட்டது.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது; “இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதி வெளிவந்த நூல்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. சமீபத்தில் வெளியிடவுள்ள அன்பினைந்திணை அத்வைத சிந்தனை ஆகிய இரு நூல்களும் இலக்கிய சமயத்துறைகளில் மிக உயர்ந்த படைப்புகள். குறித்த நூல்கள் வெளிவர உதவியாக இருந்த அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள்” என்று கூறினார்.

வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம் படித்தவர்கள், அவரைப்பின் தொடர்பவர்கள் அவருடன் கூடி வாழ்பவர்கள் யாவரும் பாக்கியசாலிகள். பண்டிதமணி அவர்களது எழுத்துக்கள் யாவும் நூல் வடிவு பெற நாம் உழைக்கவேண்டும்” என்றார்.

தனாதிகாரி திரு. த. இராசேந்திரம் கணக்கறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் “எமது குருநாதரான பண்டிதர் ஐயா அவர்கள் நமக்கு வழிகாட்டியாகவுள்ள பல நூல்களைத் தந்துள்ளார். இன்னும் தருவார். அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக” என்றார்.

அன்பினைந்திணை. அத்வைத சிந்தனை இரு நூல்களையும் யாழ் பல்கலைக் கழகத்துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் திருநெல்வேலியில் எதிர்வரும் 30-ம் திகதி ஞாயிறு முற்பகல் வெளியிடுதல் பற்றித் திருவாளர்கள் ஆர் டி. சுப்பிரமணியம், மு. நல்லையா, சீ. க. சுப்பிரமணியம், பண்டிதை பொன் பாக்கியம் ஆகியோர்கள் பேசினார்கள்.

---

# கிளிநொச்சி வரும் 600 அகதிகள்

(யாழ்ப்பாணம்)

இரத்மலானை அகதிகள் முகாமில் தங்கியுள்ள 600 பேர் அடுத்த வாரத்தில் கிளிநொச்சி அனுப்பப்படவுள்ளனர்,

இவர்கள் அனைவரும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் நிரந்தரமாக குடியேற்றப்படுவார்கள். 1983 ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்டு கடந்த இரண்டு வருடங்களாக இவர்கள் இரத்மலானை அகதிகள் முகாமில்தங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## ஆதாரபூர்வமாக நிருபித்தால்

# அவசர தேவைக்காக சான்றிதழ்களை ஒரு சில நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்

## சான்றிதழ் பெறுவதுபற்றி மக்களுக்கு விளக்கம்!

"குறிப்பிட்ட ஒரு முக்கிய அவசர கருமத்தின் நிமித்தம் சான்றிதழ் ஒன்று தேவைப்படும் நபர்கள் நேரடியாக மேலதிக மாவட்ட பதிவாளரை அலுவலக நேரத்தில் கச்சேரியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து அவசர தேவைக்கான காரணத்தை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டி, முன்னுரிமை உத்தரவொன்றை அவரது விண்ணப்ப பற்றுச்சீட்டில் பெற்றுக் கொள்வதன்மூலம், ஒருசில நாட்களுக்குள் தேவையான சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். பதிவாளர் காரியாலயத்தில் சான்றிதழ்கள் பெறுவது தொடர்பாக வெளியாகியுள்ள விளக்கத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விளக்கம் வாசகர்கள் இலகுவில் புரிந்துகொவதற்காக கேள்விபதில் ரூபத்தில் தரப்பட்டுள்ளது

கேள்வி: பிறப்பு, இறப்பு அல்லது ஏதாவது நிகழ்ந்தால் அதனைப் பதிவு செய்யவேண்டும் என்பது கட்டாயமா? இதன் தாக்கம் யாது?

பதில்: பொதுமக்கள் தமது எதிர்கால நலன்களைக் கருத்ல்கொண்டு தத்தமது இல்லங்களில் நிகழும் பிறப்புக்கள், இறப்புக்கள், திருமணங்கள் என்பவற்றை பதிவு செய்தல் வேண்டும். முறைப்படி பதிவு செய்யப்படாத மேற்படி நிகழ்வுகள் எதுவும் சட்டபூர்வ நிகழ்வுகளாக கருதப்படமாட்டாது. ஒருவரது உண்மையான பிறந்த அல்லது இறந்த திகதியும் ஒர் ஆணினதும் பெண்ணினதும் திருமணத் திகதியும் பதிவாளர் நாயகத்தினுல் நியமிக்கப்பட்ட பிரிவு அல்லது மாவட்ட பதிவாளரினுல்பதியப்பட்டுவழங்கப்பட்ட சான்றிதழ் வாயிலாக மாத்திரமே சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படலாம். உலகின் எந்த நாட்டிலேனும் ஏற்றுக் கொள்ளப்படுவதும் இப்பதிவுச் சான்றிதழே.

கேள்வி: இந்தப் பதிவுகளை செய்பவர் யார்?

பதில்; இப்பதிவுகளைச் செய்வதற்கு பதிவாளர் நாயகத்தினுல் நியமனம் செய்யப்பட்ட பகுதிகளிலும் கடமையாற்றும் குறிப்பிட்ட ஒவ்வொரு உள்ளூர் பதிவாளர்கள் அல்லது மாவட்டப் பதிவாளர் அதிகாரம் பெற்றுள்ளார்.

கேள்வி: வீட்டில் நிகழும் பிறப்பு, இறப்பு அல்லது தருமணம் ஒன்றினை எவ்வாறு பதிவுசெய்து கொள்ளலாம்?

பதில்:

(அ) வீட்டில் நிகழ்ந்த பிறப்பினை தகப்பன், தாய் அல்லது பிறப்பு சம்பவித்தபொழுது

> யாழ் பதிவாளர் காரியாலயத்தில் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு சான்றிதல்கள் பெறுவது தொடர்பாகவும் அவை பற்றிய சகல விபரங்களை குறிப்பிட்டு வெளியிப்பட்டுள்ள விளக்கத்தினை இங்கே தருகின்ருேம்.

வீட்டில் இருந்த உறவினர் அல்லது வேருெருநபர் கிராம சேவை அலுவலருக்கு அப்பிறப்பு நிகழ்ந்த 42 நாட்களுக்குள் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அவர் அதனை உள்ளூர் பதிவாளருக்கு தமது அறிக்கை மூலம் அறிவித்து நிகழ்வினைப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுப்பார்.

(ஆ) வீட்டில் நிகழ்ந்த இறப்பாயின் இறப்பு சம்பவிக்கையில் அருகில் இருந்த இனத்தவர், கடைசி நோய் காலத்தில் அவரைப் பராமரித்த இனத்தவர் இறப்பின்போது அருகில் இருந்தவர் அல்லது பூதவுடலை அடக்கம் செய்தவர் ஆப் பிறப்பினை 5 நாட்களுக்குள் கிராம சேவை அலுவலருக்கு அறிவிக்கவேண்டும். சிராமசேவை அலுவலர் அதனை உள்ளூர் பதிவாளருக்கு அறிக்கை வாயிலாக அறிவித்துப் பதிவு செய்விப்பார்

வீட்டில் நடாத்தப்படும் ஓர் திருமணப்பதிவு, அதற்கான விசேட உத்தரவுப்பத்திரமொன்றினைச் செல்லுபடியாக்கத்தக்க 30 ரூபா பெறுமதியான முத்திரையொட்டப்பட்ட இல்லத்தில் நிகழ்த்தப்படவிருப்பதற்கான விசேட திருமண அனுமதிப்பத்திரம் ஒன்றினை மேலதிகப் பதிவாளரிடம் பெற்றுக்கொள்வதன் வாயிலாகப் பதிவாளரைக் கொண்டு ஒரு திருமணத்தினை வீட்டினில் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

கேள்வி: பிறப்போ, இறப்போ நிகழ்ந்து எத்தனை நாட்களுக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்?

பதில்: பொதுவாக உள்ளூர் பதிவாளர் ஒருபிறப்பு அல்லது இறப்பு நிகழ்ந்த மூன்று மாத காலத்துள் அதனைப் பதிவு செய்ய அதிகாரம் பெற்றுள்ளார்

கேள்வி: இதற்கான கட்டணம் யாது?

பதில்: பிறப்போ, இறப்போ நிகழ்ந்த மூன்று மாதங்களுள் சம்பந்தப்பட்ட பிரிவுப் பதிவாளர் வாயிலாகப் பதியப்பட்ட எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

கேள்வி: மூன்று மாதம் கடந்த இறப்பையோ, அல்லது பிறப்பையோ பதிவு செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்?

பதில்: மூன்று மாதம் கடந்த பின்னர் ஆனுல் ஒருவருடகாலத்தினுள் மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் கச்சேரியில் தகுந்த சான்றுகளுடன் 1/- ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட வெளிப்படுத்துகையொன்றினைச் சமர்ப்பித்துப் பதிவு செய்து கொள்ளலாம்.

கேள்வி: ஓர் பிறப்பையோ, அல்லது இறப்பையோ பதிவு செய்வதற்குக் கையாளவேண்டிய நடைமுறை என்ன?

பதில்: மருத்துவமனையில் நிகழும் பிறப்புகளைப் பதிவிப்பதற்கு ஆ 32 இலக்கதகவல்படிவத்தையும் மருத்துவமனையில் நிகழும் இறப்புகளை பதிவிப்பதற்கு ஆ 32 இலக்க தகவல்படிவத்தையும் உபயோகித்தல் வேண்டும்.

பிறப்போ இறப்போ இல்லங்களில் நிகழ்ந்திருப்பின் ஆ 4 இலக்க தகவல் படிவம் வாயிலாக பிறப்பும் ஆ 11 படிவம் வாயிலாக இறப்பும் பிரிவு கிராமசேவை அலுவலருக்கு அறிவித்தல்வழங்கப்பட்டு அவரது அறிக்கை வாயிலாக பிரிவுப் பதிவாளர் பதிவேட்டில் பதியப்படவேண்டும். இப்படிவங்களை பிரிவு பதிவாளர்களிடமிருந்தும் மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கே: பிறப்பொன்றைப்பதிவு செய்ய என்னென்ன விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்?

ப: பிறப்பொன்றினைப் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்

(1) பிறப்பு நிகழ்ந்த திதியும் இடமும்.

(2) பிள்ளைக்கு இடப்பட்ட பெயர்

(3) பிறந்த பிள்ளை ஆணு/பெண்ணு எனும் விபரம்

(4) பிள்ளையின் தகப்பனினதும் தாயினதும் முழுப்பெயர்கள்

(5) பிறந்த திகதிகள்

(6) பிறந்த இடங்கள்

(7) சாகியம் (இனம்)

(8) தகப்பனின் தொழில்

(9) தாயின் வயது

(10) பெற்ருர் திருமணம் செய்தவர்களா?

(11) பாட்டன் இலங்கையில் பிறந்தவராயின் அவரதுமுழுப் பெயர்

(12) அவர் பிறந்த ஆண்டு

(13) அவர் பிறந்த இடம்

(14 தகப்பன் இலங்கையில் பிறந்தவராயின் பூட்டனின் முழுப்பெயர்

(15) பிறந்த ஆண்டு

(16) பிறந்த இடம்

(17) தகவல் அறிவிப்பவரின் முழுப்பெயர், வதிவிட முகவரி உறவுமுறை அல்லது எந்த கைய நிலையில் தகவல் அளிக்கப்படுகிறது என்ற விபரங்கள்

கே: இறப்பொன்றைப் பதிவு செய்வதற்கு என்னென்ன விபரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(1) இறப்பு நிகழ்ந்த திகதியும் இடமும்

(7-ம் பக்கம் பார்க்க)


## உற்பத்தியாளர்களுக்கு

எந்த உற்பத்தியின் வெற்றிக்கும் அடிப்படையான ஒரு தேவை முறையான சந்தைப்படுத்தலாகும். உங்கள் உற்பத்திப் பொருட்களைத் திறம்பட விநியோகிக்கவும் விற்கவும் மிகச்சிறந்த முறை எதுவென ஆராயும் உள்ளூர் உற்பத்தியாளர்களே!

''டைன் அட்ஸ் மாக்கெற்றிங்'' அளிக்கும் விளம்பரத்துடன் இணைந்த விநியோக சேவையைப் பயன்படுத்தி அதிக பயன் பெறுங்கள். போட்டி மிக்க சந்தையில் உங்கள் பொருளின் விற்பனையை ஸ்திரப்படுத்துங்கள்.

உங்கள் உற்பத்தி எதுவானுலும் விநியோகப் பொறுப்பை நாம் ஏற்போம். தொடர்பு கொள்ளுங்கள்.

உற்பத்தியில் முழுக்கவனத்தையும் செலுத்த விற்பனையை எம்பொறுப்பில் விடுங்கள்!

**Dyn Ads Marketing**

(A division of Dynamic Engineering Ltd)

476, Main Street, Chundikuli, Jaffna.


## ஆசிரிய உலகிற்கு முன்மாதிரி காட்டிய இலட்சிய புருடர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அகில இலங்கையிலும் முதன்மை வாய்ந்த கல்லூரிகளில் ஒன்ருக விளங்குவதற்கு அக்கல்லூரியில் பணிபுரிந்த ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையே மிக முக்கியமான காரணமாகும். இவ்வித பணிபுரிந்த ஆசிரியர்களின் வரிசையில் பலரை நாம் என்றும் நினைவுகூர்ந்து வழிபடக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களுள் ஒருவர்தான் அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்து அமரத்துவம்பெற்ற உயர்திரு. அ சரவணமுத்து அவர்கள்.

அராலி இந்துக் கல்லூரியில் ஒரு சில ஆண்டு காலம் ஆசிரியப் பணிபுரிந்த பின் 1937-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்து, தொடர்ச்சியாக 1970-ம் ஆண்டு வரை அக்கல்லூரியிற் சிறந்த பணியாற்றி. சேவை மூப்பு அடிப்படையில் இளைப்பாறிச் சென்ருர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய நற்பணிகள் பல. திரு C சபாரத்தினம் அவர்கள் உதவியதிபர் பொறுப்பை ஏற்றதன் பின் பௌதிகவியற்றுறைப் பொறுப்பாசிரியராகத் திரு அ சரவணமுத்து கடமையேற்ருர் பெருகிவரும் விஞ்ஞானத்துறை மாணவர்களின ஆய்வுகூடத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பணியாக இவர் எடுத்த முயற்சியால் இன்று காணப்படும் பௌதிக ஆய்வுகூட விஸ்தரிப்புக் கட்டடம் கட்டப்பட்டது. எமது கல்லூரி விளையாட்டு மைதானத்தின் சுற்றுமதிலை மேற்பார்வை செய்து கட்டி முடித்தவரும் இவரே. சில மாத காலம் விடுதிச்சாலை அதிபர் பொறுப்பையும் ஏற்று நற்பணி புரிந்தார்.

வகுப்பறைக் கற்பித்தலில் பேராற்றல் படைத்தவர். மாணவர்களை அவரவரது ஆற்றலுக்கு ஏற்றவாறு வழிநடத்தி முன்னேற்றுவதில் கைதேர்ந்த வல்லாளராக விளங்கினர். நெறி தவறிச் செல்லும் மாணவர்களை நல்வழிப்படுத்திக் கல்வியிலும் வாழ்விலும் முன்னேற்றி வைத்த அவரின் சிறப்பியல்பு மெச்சத்தக்கதாகும் பல்கலைக்கழகத்திற்குக் கூடியதொகையான மாணவர்களை அனுமதி பெறச் செய்வதாலல் கற்பிக்கும் நான்கு பாடங்களில் எதிலாவது குறைவிலாத புள்ளிகளை ஒவ்வொரு மாணவனும் பெறுதல் அத்தியாவசியம் என்று அடிக்கடி கூறிவருவதுடன் நில்லாது தன்னுடன் இணைந்து கற்பிக்கும் ஆசிரியர்கள் அத்தனை பேரையும் முயற்சியுடையோராக இயங்குமாறு வற்புறுத்துவார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கல்வித் தரத்தை வானளாவஉயர்த்தவேண்டும்.



இன்று
மூன்ருவது
சிராத்த தினம்

அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கல்வியிலும் வாழ்க்கையிலும் முன்னேற்றங் காணவேண்டும் என்ற இலட்சிய அடிப்படையில் பணிபுரிந்து ஆசிரிய உலகிற்கு முன்மாதிரி காட்டிய இலட்சிய புருஷர்களாக விளங்கினுர்கள். திரு அ. சரவணமுத்து கணிதம், இரசாயனம், பௌதிகம் ஆகிய துறைகளிற் கல்வி கற்ற மாணவர்களின் சிறந்த வழிகாட்டியாகவிளங்கினுர் அவர்களிடம் இத்துறைகளில் கல்விகற்ற மாணவர்கள் இலங்கையிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்கலைக் கழகப் பேராசிரியர்களாக, விரிவுரையாளர்களாக, பொறியியல், மருத்துவ, வேறு பல் துறைகளிலும் நிபுணர்களாகக் கடமைபுரிவதை நாம் காண்கிருேம சக ஆசிரியர்களின் மதிபபைப் பெற்றிருந்தார்.

ஆசிரியத் தொழிலைச் சிறந்த பணியாகக் கருதிச் செயற்பட்ட ஆசிரியர்கள் செல்வந்தர்களாகத் திகழ்வதில்லை ஆயிரக்கணக்கான மாணவர்களின் நல்லெண்ணமும் மதிப்புமே அவர்கள் தேடிய பெருநிதியம்; அதுவே அவர்தம் குடும்பங்களின் நல்வாழ்விற்குத் தேடி வைக்கும் சொத்து. திரு. அ. சரவணமுத்துவின் இளைப்பாறிய வாழவும் இவ்வாறே அமைந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அவரது நற்பணியினுல் வளம்பெற்றது. அவரின் பூதவுடல் மறைந்தாலும் அவரோடு நெருங்கிப் பழகிய ஆசிரிய, மாணவர்கள் மனதில் என்றும் அழியாத அமரத்துவ நிலையை அவர் பெற்றுள்ளார்.

பொ. ச. குமாரசுவாமி

# இலங்கை இனப் பிரச்னை: பேச்சுவார்த்தைகளை நடத்த முயற்சிகள் நடைபெறுகிறது!

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்னையை தீர்ப்பது தொடர்பாக அடுத்த நடவடிக்கையாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக பேச்சுவார்த்தைகளுக்கான ஒழுங்குகள் நிகழ்ச்சிநிரல்கள் ஆகியவற்றை தயாரிப்பதில் அரச அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியா சென்றுள்ள இலங்கையின் விசேட தூதுவர் திரு எச். டபிள்யு. ஜெயவர்த்தன கடந்த சனிக்கிழமை நாடு திரும்பிய பின்னர் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள பட்டு வருகின்றன.

ஒற்றையாட்சி முறையின் கீழ் மத்திய அரசினால் மாவட்டங்களுக்குப் பரவலான அதிகாரங்களை வழங்குவதும் அது பற்றிப் பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவருவதுபற்றியும் அரசு ஆராய்ந்து வருகிறது.

இப்பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அரசாங்க தரப்பிலுள்ள ஒருவரின் பெயர் அடுத்த வாரம் அறிவிக்கப்படும். அதே சமயம் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பிலும் தீவிரவாதிகளின் சார்பிலும் தலா ஒவ்வொருவரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு அவர்களே உத்தேச பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள்.

தமிழ் தீவிரவாதிகள் சார்பில் கலந்துகொள்பவரை இந்திய அரசே தீர்மானிக்கும் என்று இலங்கை அரசுதரப்பில் கூறப்படுகிறது.


ஆயினும் இப்பேச்சுக்கள் எப்போது, எங்கு நடைபெறும் என்று இதுவரை தெரியவில்லை.

## கடத்தப்பட்ட கணவரை விடுவிக்குமாறு மனைவி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையிலிருந்து கடந்தமாதம் 27-ம்திகதிஇனந் தெரியாதவர்களினால் கடத்திச்செல்லப்பட்ட தமது கணவன்கதிரவேலு இரத்தினத்தை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைசெய்யுமாறு திருமதி இரத்தினம் புவனேஸ்வரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றுவரை கணவன் விடுதலை செய்யப்படாததினால் கால் ஊனமுற்றதானும், தனது நான்கு சிறிய பிள்ளைகளும் உண்ண உணவின்றி மனக்கவலையால் பாதிப்புற்றுள்ளோம் என்றும், கணவனை விடுதலை செய்து, சிறு பிள்ளைகளையும், தன்னையும் காப்பாற்றும்படி உருக்கமாகவும், பணிவாகவும் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும் அந்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது. (ஃ)



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகளின் தலைமையில் நடைபெற்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் குருபூசையன்று ஆதீன புராண சபை மாணவர்களான யாழ் மாவட்ட இந்து இளைஞர் தொண்டர் சிறுவர்களின் புராணப் படிப்பு அரங்கேற்றத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## கூட்டுப்பிரார்த்தனையால் ஆன்மீக வளர்ச்சி ஏற்படும்

(யாழ்ப்பாணம்)

''கூட்டுப் பிரார்த்தனையினால் மக்களுக்கு மனவுறுதியும் ஆத்மீகவளர்ச்சியும் கடமையுணர்ச்சியும் ஏற்படுகின்றன. எனவே இன்றைய சிறுர்களுக்கு இக்கால மாற்றம் சமய உணர்வை ஊட்டுவதன் மூலம் சிறுவர் சிறுமிகளைக் கொண்டே நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைப் பேச வைப்பதன் மூலமும் இக்கிராமத்தில் சமய உணர்வை நன்கு பரப்பலாம்.''

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்துல் நடைபெற்ற கலாமன்றத்தினரின் கூட்டுப்பிரார்த்தனை 29வது ஆண்டு நிறைவு விழாவில் பேசும்போது சிறப்புப்பேச்சாளராகக் கலந்து கொண்ட திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலய ஆசிரியை திருமதி சிவயோகம் அநவரதவிநாயகமூர்த்தி கூறினார்கள்.

இவ்விழாவிற்கு கலாமன்ற சனசமூக நிலையத் தலைவர் திரு. ம. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். மேலும் திருமதி மூர்த்தி தொடர்ந்து பேசுகையில் ''அவனருளாலே அவன் தாள் வணங்கி சிந்தை மகிழ சிவபுராணம்தன்னைப் பொருளுணர்ந்து ஒதி பிரார்த்தனை செய்வதன்மூலம் இன்றையநெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் தமிழ் மக்கள்தமது இன்னல்களை இறைவன் அருளால் குறைத்துக் கொள்ளலாம்'' என்றுகுறிப் பிட்டார்.

## "காலத்துக்கு ஏற்ப கல்வித் திட்டங்கள் மாறுகின்றன"

[யாழ்ப்பாணம்]

''காலத்திற்கு ஏற்ப கல்வித் திட்டங்களும் மாற்றம் பெறுகின்றன இன்றைய புதிய கல்வித்திட்டம் வெற்றிகரமாக அமுல் நடாத்தப்படுவதற்கு பெற்றோர்களின் பங்கு அளப்பரியது

இவ்வாறு யாழ் இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரைநிகழ்த்துகையில் கல்லூரி அதிபர் ச பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில்: வாழ்க்கையோடு இயைந்த கல்வியே இன்று வேண்டற்பாலது. இத்தகைய மாற்றங்களையும் தேவைகளையும் பெற்றோர்களும் தெரிந்து வைத்திருப்பது அவசரமும் அவசியமுமாகும்'' என்றார்.

வட்டாரக் கல்வியதிகாரி எஸ். சிவநாயகமூர்த்தி பாடசாலைகள் வலயமாகப் பிரிக்கப்படுவது பற்றிய திட்டத்தினை தமது உரையில் தெளிவுபடுத்தினார். நடப்பு ஆண்டு அலுவலர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: அதிபர் ச. பொன்னம்பலம், செயலாளர்: இ சங்கர், பொருளாளர்: ரி. துரைராசா. செயற்குழு உறுப்பினர்கள்; பி. மகேந்திரன், எஸ் ஜெகானந்தகுரு. என். சோமசுந்தரம், சி. முத்துக்குமாரசாமி, வி. தியாகராசா, எம். சி. மாணிக்கவாசகர், க. பூபாலசிங்கம், வி. அரியநாயகம், ஈ. வல்லிபுரம், க. கணேசரத்தினம், த. வித்தியாதரன், என். கே. பத்மநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## "சோஸலிசபாதையில் இளைஞர் அணிதிரள வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

''விஞ்ஞான சோசலிசத்தில் நம்பிக்கையுள்ள அனைவரையும் ஒன்று படுத்துவதற்கு புரட்சிகர தத்துவமான மார்க்சீசத்தை அடிப்படையில் ஏற்றேயாக வேண்டும். மார்க்சிசத்தை தாக்குதல்களிலிருந்தும் சிதைவுகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிவிட்டது இதனை ஈடேற்ற எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து இளைஞர் இயக்கங்கள் செயல்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு எஸ். விஜயானந்தன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இளைஞர் ஆண்டு கருத்தரங்கில் கூறினார்.

திரு. வி. தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசியதாவது:

எமது நாட்டிலுள்ள இளைஞர்கள் இதனை உணர்ந்து இன, மத, சாதி பிரதேச வேறுபாடுகள் அத்தனையையும் மறந்து சோசலிசப் புரட்சியே குறிக்கோளாகக் கொண்டு அணி திரளாதுவிட்டால் எமது போராட்டங்கள் அத்தனையும் அழிவுப்பாதையிலே கொண்டு போய்விடும் என்றார்.




## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 12 (1985-6-26)
வாரம்: புதன்
திதி; அட்டமி முற்பகல் வரை
நட்சத்திரம்: அத்தம் முன் இரவுவரை

மேடம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விவாதங்களால் வீண் பெயர் கேட்க நேரிடும். நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

இடபம்: குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றி காணும். குன்றென நிமிர்ந்து நிற்பீர். குவிந்திடும் புகழும்.

மிதுனம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். கலைஞர்களுக்கு சுப தினம்.

கடகம்: பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள். குறிப்பாக அரசியல்வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம். சிலருக்கு எதிர்பாராத வரவுமுண்டு.

சிங்கம்: எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசர முடிவு ஆபத்தில் சிக்க வைக்கலாம் குடும்பத்திலும் பதட்டநிலை தென்படும்.

கன்னி: மனநிறைவுக்கு இடமுண்டு மதிப்பு உயரும்: அறிவாற்றலால் அரசயோகமும் கிடைக்கும். சிலருக்கு இடமாறவும் நேரும்.

துலாம்; அறிவுத் தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள். விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

விருச்சிகம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும். அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் கடற்றொழிலாளர்கள் கவனம் வேண்டும்.

தனுசு: புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள். தெய்வத்தின் அருள் கிடைக்கும். தங்கள் செயற்திறமை மற்றவர்களை திகைக்க வைக்கும்.

மகரம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர். புத்திரசுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் உண்டு.

கும்பம்: வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும் உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், அமைதி நன்று.

மீனம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. காதலர் வாழ்க்கையில் தித்திப்பான சம்பவம் இடம்பெறும்: சுபதினம்,

திருமலை
வே. ரவீந்திரன்

**பவித்ரா மினி**
கஸ்தூரியார் வீதி
(யாழ் இந்துக் கல்லூரியடி)
4' திரைவானில்
10-30, 2-30, 4-30
**DEMENTED**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**வெலிங்டன்**
10-30 — 2-15 — 4-15
THE HANDS OF THE NIGHT"
(Adults only)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**லிடோ** சினிமா
10-30 — 2-30
பாண்டியன் — ரேவதி நடித்த
**'புதுமைப் பெண்'**
(ஈஸ்ட்மன் கலர்)

**குமரன் மினி**
சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 4-30
QUEEN OF EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.
AM. 9-00, 12-30;
**LINDA**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

S T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காலை 10-30 காட்சி மட்டும்
கமலஹாசன் — ஊர்வசி
**அந்த ஒரு நிமிடம்**
காலை 9-00, 1-00, 2-30, 4-30 p.m
**Emmanuel Kiss Me**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**தேவிமினி**
சினிமா
(வின்ஸர் அருகாமை)
23-6-85
10-30, 2-15. 4-15 p. m.
**EROTICA**
ஒரு காமக் கன்னியின் களியாட்டம்
கண்டிப்பாக வயது வந்தவர்க்கு மட்டும்

**வின்ஸர்**
தியேட்டர்
தினசரி 10-30, 2-00, 4-15
THE DEVILS' MEN
பேய்களின் மக்கள்
திகிலூட்டும் கோரக்காட்சிகள், திடுக்கிடப் பண்ணும் எதிரொலிகள், மாயை, மர்மம், மயக்கமூட்டும் காட்சிகள் நிறைந்த சித்திரம்.
3 நாட்கள் மட்டும்


## எழுதுமட்டுவாள் ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ஆசிரியர் சி. விநாயகமூர்த்தி, மேலும் ஆசிரியர் சி. சின்னராசா, சி தில்லைநாதன், ஆசிரியர் இ. கைலைநாதன், திரு. க. மார்க்கண்டு, ஆசிரியை திருமதி ச. தெய்வானைப் பிள்ளை, திரு. கு. கிருஷ்ணன் ஆகியோரும் சபையின் உறுப்பினராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (a)

## அவசர . . .

[5ம் பக்கத் தொடர்ச்சி]

(2) இறந்தவரின் முழுப் பெயர்

(3) இறந்தவர் ஆணு/பெண்ணு எனும் விபரம்

(4) இறந்தவரின் வயது

(5) இறந்தவரின் தொழில்

(6) இறந்தவரின் பெற்றோர்களது முழுப்பெயர்கள்

(7] இறப்பிற்கான காரணம் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட அல்லது அடக்கம் செய்யப்பட்ட இடம்

[8) தகவல் அளிப்பவரின் முழுப்பெயர், வதிவிட முகவரி உறவுமுறை அல்லது தகவல் எத்தகைய நிலையில் அளிக்கபடுகின்றது என்ற விபரம்.

கே: பிறப்பையோ இறப்பையோ பதிவு செய்வதற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் யாது?

ப: (அ) பிறப்போஇறப்போ நிகழ்ந்து மூன்றுமாத காலத்துள் அதனைப் பதிவுசெய்வதற்கு எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

[ஆ] மூன்று மாதம் கடந்த ஆனால் ஒரு வருடத்திற்குள் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதாயின் ரூபா 1/- பெறுமதியான செலுபடியாகும் முத்திரை ஒட்டபபட வேண்டும்.

[இ) ஒரு வருடத்திற்குப் பின்னர் பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பின் ரூபா 5/- பெறுமதியான செல்லுபடியாகும் முத்திரை ஒட்டப்படல் வேண்டும்.

கே: பிறப்பு இறப்பு, திருமண சான்றிதழ்களைப் பெறுவதற்கு யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்?

ப: மேலதிக மாவட்டப் பதிவாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கே: எத்தனை ரூபா பெறுமதியான முத்திரைகள் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும்?

ப: (அ) பதிவிலக்கம் அல்லது பதிவுத் திகதி தெரிந்திருப்பின் ஒரு சான்றிதழின் பொருட்டு ரூபா 5/- பெறுமதியான முத்திரை ஒட்டுதல் வேண்டும்.

(ஆ) பதிவிலக்கமோ, பதிவுத் திகதியோ தெரியாதிருப்பின் பதிவேடுகளை மூன்றுமாத காலத்திற்குத் தேடுதல் செய்வதற்கும் அதன்மீது சான்றிதழொன்றை வழங்குவதற்கும் ரூபா 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும்.

(நாளை தொடரும்)

## அபிவிருத்தி சங்க நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

கொல்லங்கலட்டி இ: அ. க. கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக திரு. க, தனபாலசிங்கமும், செயலாளராக ச. கனகரத்தினமும், பொருளாளராக சி. தியாகராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.


**மொடேர்ண் மினி சினிமா**
[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]
**HIT MAN**
விறுவிறுப்பான துப்பாக்கிச் சண்டைக் காட்சிகளுடன் பாலியல் காட்சிகளும் ஒருங்கே அமைந்த படம்,
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**ஸ்ரான்லி மினி 'A'**
10-30, 12-30, 2-15, 4-45
**Linda**
(வயது வந்தோருக்கு மட்டும்)

**ஸ்ரான்லி மினி 'B'**
10-30, 2-30
மோகன்
**குற்றவாளிகள்**

**லதா மினி**
(கோண்டாவில்)
10-30, 3-00, 5-45
விஜயகாந்த்
(இரும்படங்களில்)
ஜோதி
**ராமன் ஸ்ரீ ராமன்**

**நியூசாந்தி (மினி)**
(யாழ். சாந்தி சினிமாவில்)
26 — 28
கமல், ஸ்ரீபிரியா, நம்பியார், சுருளி மற்றும் முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
**நீயா?**
சாந்தி வெண் திரையில் முன்னர் ஓடி வசூல் சாதனை புரிந்த படம்

**ராஜா** தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p m.
Terence Hill - Bud Spenser
WHO FINDS A FRIEND FINDS A TREASURE
(Color)
Action Packed
Adults only
முழு நீள சண்டைகள் நிறைந்தது.
—
From: 27 6-85
HEAVEN'S GATE

**உஷா மினி** சினிமா
(கே. கே. எஸ் வீதியில் முட்டாஸ் கடை சந்திக்கும், கடைப்பிள்ளையார் கோவிலுக்கும் மத்தியில்)
27-6-85 வியாழன் முதல் ஆரம்பம்
அன்று 10-30 மணிக் காட்சி மட்டும்
"ஸ்ரீ காஞ்சி காமாட்சி"
திரைப்படம் காண்பிக்கப்படும்.
(4019) 28 முதல் FIST OF FURY III


## காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

28-6-85 வெள்ளிக்கிழமை காலை 7-19 மணி தொடக்கம் 9-15 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில் மேற்படி ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும் அத் தருணம் விசேட அபிஷேகமும், வழிபாடும், சிற்பாசாரியார் ஜெயராசா அவர்களை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து அருளாசி வழங்குதலும், வித்துவான் மு சபாரத்தினம் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும். செல்வன் இ. ஜெயராசா அவர்களின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

இங்ஙனம்.

4034 கு. ச. ஆறுமுகம்பிள்ளை.

## HOMES FOR ELDERS

Comfortable Living rooms will be made available for couples or singles at the premises of Mc Leod Hospital with easy access to Medical attention. For further Particulars please contact the Hospital Secretary, Mc Leod Hospital, Inuvil, Chunnakam, Sri Lanka.

MEDICAL SUPERINTENDENT.
Mc LEOD HOSPITAL,
INUVIL CHUNNAKAM-
SRI LANKA.

4023

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் ஆனிமாதம் (28-06-85) 14-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 30க்கும் 5-27க்குமிடையிலான சுப முகூர்த்தவேளையில்

| | |
|---|---|
| எமது புதல்வன் திருநிறைச் செல்வன் **றஞ்சித்குமார்** (Overseas Sales Representative Japan) அவர்கட்கும் | எமது புதல்வி திருநிறைச் செல்வி **லிங்கேஸ்வரி** அவர்கட்கும் |

கொக்குவில் மேற்கு சொர்ணசித்தி விநாயகர் ஆலயத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் சுற்றஞ்சூழ வந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு வேண்டுகின்றோம்.

| | |
|---|---|
| திரு. திருமதி துரைராஜா தம்பதிகள் விஜயரட்ணம் (மின்) மகாலிங்கம் தம்பதிகள | திரு. திருமதி சொர்ணலிங்கம் தம்பதிகள் (ஈழநாடு லிமிட்டெட்) சொர்ணவடலி கொக்குவில் கிழக்கு, கொக்குவில். |

3995

## கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலனிழந்தோர் பாடசாலை

அதிபர், ஆசிரியர், பிள்ளைகள்
எதிர்வரும் 29 6 85 சனிக்கிழமை
காலை 9-00 மணி தொடக்கம் நடைபெறவிருக்கும்
கீழ்க்காணும் நிகழ்ச்சிகளுக்கு
தங்களை அன்புடன் அழைக்கின்றனர்.

**வெள்ளி விழா மண்டபத் திறப்புவிழா**
**சர்வதேச வைஸ்மன் கழக உதவித்திட்டம்**

திறந்து வைப்பவர்கள்:
வைஸ்மன் லங்கா நேசையா
(முன்னைநாள் இயக்குநர் இலங்கைப் பிராந்தியம்)
வைஸ்மன் டிவேன் பெரேரா
(முன்னைநாள் இயக்குநர் இலங்கைப் பிராந்தியம்)
வைஸ்மன் ஏர்கன் கொட்லிப்
(பிராந்திய இயக்குநர்)

**வெள்ளிவிழா மலர் வெளியீடு**

திரு. கு நேசையா
(முகாமையாளர் 1969 — 1984) வரை
ஈராண்டு பரிசளிப்பு விழா

பிரதம விருந்தினர்:
திரு / திருமதி லங்கா நேசையா
கௌரவ விருந்தினர்:
திருமதி மங்களராணி சுப்பிரமணியம்
(பி. ஏ சிறப்பு — பழைய மாணவி)
திரு. க. சந்திரதாஸ்
(ஓவியர் பழைய மாணவன்)

நவீல்ட் பாடசாலை,
கைதடி, 19-6 85. [4016]

## கொள்ளை, கடத்தலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தில் நேற்று ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் பெண் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் தலைமையகத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி, கே கே எஸ். வீதி, ஸ்ரான்லி வீதிவழியாக மீண்டும் புறப்பட்ட இடத்தை வந்தடைந்தது.

'கொள்ளையருக்கு கொண்டாட்டம், ஊழியருக்குத் திண்டாட்டம், போச்சுப் போச்சு வேலைபோச்சு, கொள்ளையர் குடும்பம் வாழ்கிறது ஊழியர் குடும்பம் சாகிறது' என்றகோஷங்களை எழுப்பிக் கொண்டு சென்றனர்.

ஊர்வலத்தை வீதியெங்கும் திரண்டு நின்ற ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டனர்.

ஊர்வலத்தில் வந்த ஊழியர்கள், துண்டுப்பிரசுரங்களையும், விநியோகித்து சென்றனர்.

நீண்டகாலத்திற்குபின், யாழ். நகரில், ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது இதுவே முதல்தடவையாகும்

ஊர்வலம், ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி சந்தியைக் கடந்து சென்றுகொண்டிருந்த போது ஹெலிகோப்டர் விமானம்ஒன்று மிகவும் தாளப் பறந்து இருதடவை வட்டமிட்டு சென்றது. (க)

## இளைஞர் தாக்கப்பட்டதன் எதிரொலி——
# குடும்பமே நஞ்சுக்குப் பலி!
## நால்வர் பெண்கள்

[கிளிநொச்சி]
கிளிநொச்சி குஞ்சுப் பரந்தனில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்து ஆறுபேர் நஞ்சிடம் தஞ்சமடைந்து பரிதாபகரமாக மரணமானார்கள்.

இக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கோஷ்டி ஒன்று சைக்கிள் காணுமல் போனது தொடர்பாக கோரமாகத்தாக்கியதைத் தொடர்ந்து இதைப் பொறுக்காத குடும்பத்தவர் அனைவரும் கிருமிநாசினி அருந்தி மரணமானார்கள்.

தாக்கப்பட்ட இளைஞரும் மரணமானார். மூன்று பருவமடைந்த பெண்கள், தாய், தந்தை உட்பட ஆறுபேர் மரணமானது கிளிநொச்சிப் பகுதியில் பரபரப்பையும் சோகத்தையும் உருவாக்கியுள்ளது.

சைக்கிள் காணுமல் போனதற்கும் மரணமான இளைஞருக்கும் தொடர்பில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். ஐ. வி. சங்க ஊழியர்————
# இரண்டாவது தினமாக
# நேற்று உண்ணுவிரதம்!

[யாழ்ப்பாணம்]
யாழ். ஐக்கிய வியாபார சங்க ஊழியர்கள் நேற்று இரண்டாவது தினமாக உண்ணுவிரதமிருந்தனர்.

சங்கத்தலைமைக்காரியாலயத்தில், சுலோக, அட்டைகளுடன் நேற்றுக்காலை ஆரம்பமான உண்ணுவிரதம் பிற்பகல் 4 மணிக்கு முடிவடைந்தது.

யாழ். ஐக்கிய வியாபார சங்கமும், கிளைகளும் நேற்றும் பூட்டப்பட்டிருந்தன.

தலைமைசங்கமும், கிளைகளும் இன்று திறக்கப்படு எனக் கூறப்படுகின்றது.

அடுத்த வாரம் வடபகுதியில் உள்ள மற்றும் சில ஸ்தாபன ஊழியர்களையும் சேர்த்து பெருமளவில், உண்ணுவிரதத்தையும், ஊர்வலத்தையும் நடத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

கொள்ளையடிக்கப்பட்ட சிகரட், அல்லது அதற்குரிய பணம் சங்கத்தில் திருப்பி ஒப்படைக்கப்படும் என்ற நம்பிக்கையிருப்பதாகவும் அதுவரை தங்கள் போராட்டத்தை தொடரப் போவதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர். [க]

## துப்பாக்கிமுனையில்
# ரூபா 20 ஆயிரம் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)
மருதனுமடத்தில் நேற்று முன்தினம் காலை இனந்தெரியாதவர்களினுல் துப்பாக்கி முனையில் 20.000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

வி தர்மதேவன (26 வயது) என்பவர் இச்சம்பவத்தின் போது காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சகோதரியை வெளிநாடு அனுப்புவதற்காக, 20,000 ரூபா காசோலையை மாற்றிக் கொண்டு, தர்மதேவன், வரும்போது மருதனுமடத்தில் இனந்தெரியாத மூவர் வழிமறித்து துப்பாக்கி முனையில் பணத்தைக் கேட்டதாகவும், அவர் கொடுக்கமறுக்கவே, அவரைத் தாக்கிவிட்டுப் பணத்தை எடுத்துச் சென்றுவிட்டதாக கூறப்படுகிறது. காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம்அனுமதிக்கப்பட்டார். (க)


## மரண அறிவித்தல்
### வாலசிங்கநாயகம் பத்மநிதி

வாலசிங்கநாயகம் பத்மநிதி காலமானுர். இவர் அராலி கிழக்கைச் சேர்ந்த வாலசிங்கநாயகம் அவர்களின் அன்பு மகளும், இன்பநிதி, சிவநிதி, திருநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னுரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று புதன் பி. ப 3 மணியளவில் அராலி கிழக்கு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றுர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 4039



## மரண அறிவித்தல்
### இராசநாயகம் பாலேந்திரன்
(ஈராக்கில் அகால மரணமானுர்)

இவர் கலட்டியைச் சேர்ந்த திரு, திருமதி இராசநாயகத்தின் அன்பு மகனும் ராசேந்திரம் (கொழும்பு), மகேந்திரன், லீலாதேவி, சாந்தாதேவி வஸ்தலாதேவி, செல்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராமநாதன் [துறைமுக கூட்டுத்தாபனம், திருமலை], தங்கத்துரை, தியாகராசா ரேசினிதேவி ஆகியோரின் மைத்துனருமவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்; அ. இராசநாயகம்,
76, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.
4040


## வெலிக்கடை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
சரகாலச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர் பிதா. சிங்கராயர் தொடர்ந்து தம் சாட்சியத்தில் கூறியதாவது:

'டாக்டர்ராஜசுந்தரம்கொலை செய்யப்பட்டபோது நான் அமைதியாகவே இருந்தேன்.' 'பிதாவே இவர்கள் தாம் செய்வது என்னவென்று அறியாதிருக்கிறுர்கள் இவர்களை மன்னித்தருளும்'' என்று வேண்டிக் கொண்டேன்.

### கொடூரமான கொலைகள்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அன்று 16 அல்லது 17 சடலங்களை நான்கண்டேன். மிகவும் கொடூரமான முறையில் கொலை செப்யப்பட்டிருந்தார்கள். சடங்கள் உருக்குலைந்திருந்தன. இரும்புக் கம்பிகளினுலும், விறகுத் தடிகளினுலும் தாக்கி கொலைசெய்யப்பட்டிருந்தார்கள்.

எம்மைத் தாக்கவந்தவர்களை எதிர்த்துப்போராட நாம் தீர்மானித்தோம். மேசைக் கால்களை உடைத்து வைத்துக் கொண்டு சுமார் அரைமணி நேரம் எம்மைக் காப்பாற்றிக் கொண்டோம்.

நீதவான்: அப்போது சிறைக்காவலர்கள் எங்கே இருந்தார்கள்.

வண பிதா சிங்: ''அவர்கள் அங்கே வெளியில் நின்றுர்கள். இச்சம்பவத்துக்குமுன் எமக்கு பாதுகாப்புஅளிக்கும்படி சிறை அதிகாரியிடம் கூறுமாறு காவலாளியிடம் கேட்டுக்கொண்டோம். அவர் போகமறுத்த விட்டார். நாங்கள் உள்ளே இருந்தபோது பெரிய கும்பல் ஒன்று வந்தது. எம் மீது எறியப்பட்ட கற்களை எடுத்து பிதா. சின்னராசா, பிதா. ஜெயதிலகராஜா, நித்தியானந்தன் ஆகியோருக்கு கொடுத்து உதவிபுரிந்தேன் அதன் பிறகு ராணுவ அதிரடிப்படை வந்து கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தது அப்போது சிறைக் கைதிகளில் 5 பேர் எம்மிடம் சிக்கிவிட்டனர். அவர்களை குளியல் அறைக்கு கொண்டு சென்று கண்களைக் கழுவிக்கொள்ள உதவினும். அதிரடிப் படையினர் அவர்களை அழைத்துச் சென்றனர். எமது சமயத்தின்படி எம்மை பாதுகாக்க சண்டை செய்வது சரியே.

### குருநகர் முகாமில்

குருநகர் ராணுவ முகாமில் என்னை நீண்டநேரம் விசாரித்தார்கள். உணவு [எதுவும் வழங்கவில்லை- தேனீர் ஒரு கோப்பை மாத்திரம் வழங்கப்பட்டது. தூஷண வார்த்தைகளால் பேசினுர்கள் நான் அமைதியாக இருந்தேன் அமல உற்பவத்திலிருந்து குருநகர் முகாமுக்கு கொண்டு செல்கையில் இன்ஸ்பெக்டர் காலலகே, இஸ்ரன் ஆகிய இருவரும் என் மீது றிவால்வர்களை நீட்டி (நெஞ்சை கையால் தொட்டுக் காட்டுகிறுர்) நீங்கள் எம்மோடு ஒத்துழைககாவிட்டால் இன்பம், செல்வம் ஆகியோருக்கு ஏற்பட்ட கதிதான் என்றுர்கள். (விசாரணை தொடர்கிறது)

# போர் நிறுத்தத்தின் உண்மை அர்த்தமென்ன?
## துண்டுப்பிரசுரம் கூறுகிறது

(யாழ்ப்பாணம்)
''கடந்த சில நாட்களாக நாடெங்கிலும் பரப்பப்பட்டு வரும் யுத்தநிறுத்தம் பற்றிய பேச்சுக்களின் உண்மையான பின்னணி என்ன? அரசின் படைகள் இன்று நேசக்கரம் நீட்டி அணைக்க வருவதன் பின்னணி என்ன என்பதனையும் நாங்கள் அறிந்தும் பாராமுகமாக இருந்துவிடக் கூடாது''

''போர் நிறுத்தமா? போருக்கு ஆயத்தமா?'' என்ற தலைப்பில் மாணவர் இளைஞர் பொது மன்றத்தால் விடுக்கப்பட்டுள்ள துண்டுப்பிரசுரமொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ''போர் நிறுத்தம் போராட்ட முடிவல்ல'' என்ற வாசகங்களுடன் நிறைவுபெறும் அந்தப்பிரசுரத்தில் மேலும்: ''கிழக்கில் போராளிகளை அடக்குவதற்கு தீவிரப்பயிற்சியில் ஈடுபட்ட போது விமானத்திலிருந்து தவறிவிழுந்த கூலிப்பட்டாளத்தானது மரணமும் சிறிலங்கா அரசின் போர் ஒத்திகை பற்றிய செய்தியும், பிரிட்டனிலிருந்து வரப்போகும் பீரங்கிகள் இணைக்கப்பட்ட ரோந்துப்படகுகளும், பாதுகாப்பு அமைச்சரினதும் சிறிலங்கா இராணுவ ஆலோசகரினதும் அவசர தென்கொரிய பயணத்தையும் எவ்வாறு போர்நிறுத்தம் எனகொள்ள முடியும்.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளை அரசு தீர்க்க முனைந்ததாக கூறிக்கொண்டமையும் இச்சமயங்களிளெல்லாம் தூண்டிவிடப்பட்ட மாற்றுக்கட்சியினர், பௌத்த குருமார்கள் எதிர்ப்புக்களைக் கிளப்பியதையும் பின்னர், நிகழ்த்தப்பட்ட உடன்படிக்கைகள் கிழித்தெறியப்பட்டமையும் வரலாருக நம்முன்னே படைக்கப்பட்டுள்ளது. இவ்வரலாற்றின் படி முறையிலேயே அநுரா பண்டாரநாயக்காவின் இன்றைய பேச்சான ''எந்த தீர்மானமும் தேர்தல் மூலம் மக்களின் அங்கீகாரம் பெறுவிடின் எதிர்த்தே தீருவோம்'' என்பதன் உள்ளர்த்தத்தினை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது (ரா)

## அந்தக் கோர..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தில் பிரயாணம் செய்து பலியானவர்கள்.

இவர்கள் நுவரெலியாவைச் சேர்ந்தவகள். 10 வருடங்களுக்கு முன்னர் கனடாவில் சென்று குடியேறிய இவர்கள் தற்போது கனடா பிரஜைகளாகவுள்ளனர். தந்தையார் பெயர் ஜே. டி. லோரண்ஸ் தாயார் பெயர் சரோஜினி லோரண்ஸ்.

இந்த இரு சகோதரிகளும் பரத நாட்டியக்கலையில் கனடாவில் பிரசித்தி பெற்றவர்கள். முக்கியமாக 'காவடி ஆட்டம்' போன்ற பரத நாட்டியத்தின் சகலதுறைகளிலும் இவர்கள் இருவரும் சிறப்புப் பெற்றிருந்தனர் பரத நாட்டியத்தின் இறுதிச் சிறப்புப் பரீட்சைக்காகவே இவர்கள் மேற்படி விமானத்தில் இந்தியாவரவிருந்தனர்.

இவர்களை கனடா மொன்ட்றியோல் விமான நிலையத்தில் தாய், தந்தையர். வந்து வழி அனுப்பிவைத்தனராம்.

இந்த விமான விபத்து தொடர்பாக இரு சகோதரிகளின் பெற்றோருடன் தொடர்புகொண்டபோது ''தமது பிள்ளைகள் திரும்பி வருவார்கள் என்று தாம் நம்புவதாகவும் இலங்கை நண்பர்கள் தமது பிள்ளைகள் சுகமாக திரும்பிவரவேண்டும் என்று பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுள்ளனர்.''

## உலகின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
போயிங் விமானக் கம்பனியிடம் இந்த விமானம் வாங்கப்பட்டது. விமானத்தை ஓட்டி வந்த விமானக்காப்டன் நரேந்திரா 35 வருட அனுபவமுள்ளவர். இவர்விரைவில் ஓய்வு பெறவிருந்தார்.

விமானத்தின் கறுப்புப்பெட்டியைத் தேடிக்கண்டுபிடிக்கும் பணி இப்போது நடைபெற்று வருகிறது.

## இலங்கை அரசுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஒருமைப்பாட்டுக்குள்ளேயே இனப்பிரனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும்படி றீகன் அரசாங்கம் அடிக்கடி இலங்கை ஜனதிபதியை வற்புறுத்தி வந்துள்ளதாகவும் இந்த விடயத்தில் இந்தியாவின் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என யோசனை கூறப்பட்டதாகவும் அப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்யாதிருக்கும் அதேவேளையில் வேறுநாடுகளும் தலையிடாமலிருப்பதை அமெரிக்கா வலியுறுத்தி வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அடுத்த வாரம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கிறது. இருந்தபோதிலும் பெற்றுேல். டீசல் விற்பனவு செய்யும் அங்காடி வியாபாரிகளின் தொல்லை அதிகரித்துக் கொண்டே செல்வதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu Po Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126.